பக்கங்கள் 16

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 25 வியாழக்கிழமை 12.10.2023 அதிர்வு 73

## கடற்கரையிலிருந்து மனிதத் தலை மீட்பு!

துண்டிக்கப்பட்ட மனிதத் தலை ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பழுனுகம பழைய அம்பலம கடற்கரையில் இன்று காலை இந்த 04

### மறதி வியாதிப் பிரச்சினை வந்திருக்கலாமாம்



# விக்கி வைத்தியரை சந்திப்பது நல்லது!

### விரைந்து செய்யக் கோருகிறார் சுமந்திரன்



யாழ்ப்பாணம், ஒக்டோபர் 12

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் வெகுவிரைவில் வைத்தியர் ஒருவரைச் சந்திக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ் இணையத்தளம் ஒன்றின் காணொலி நேர்காணலில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

“இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குத் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனுப்பிய கடிதங்கள் எதுவும் சென்றடையவில்லை என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவித்துள்ளார். எனவே, இந்தியப் பிரதமரை நாங்கள் நேரில் சந்திக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் தங்கள் கருத்து என்ன?’ - என்று அந்த நேர்காணலில் எழுப்பப்பட்ட கேள்விக்குச் சுமந்திரன் எம்.பி. 04

## பிரம்படிப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு



- எஸ்.நிதர்ஷன் -

யாழ். கொக்குவில் – பிரம்படிப் படுகொலையின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று நடைபெற்றது. 04

## வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட பாடசாலை மாணவன் சடலமாக மீட்பு



வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட பாடசாலை மாணவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கண்டி –தெல்தோட்டை – லிட்டில்வெளி 04



### எஸ்.ரி.எவ். அதிரடி வேட்டையில்

## பாதாளக் குழுவைச் சேர்ந்த ஒருவர் சுட்டுப் படுகொலை

பரஸ்பர துப்பாக்கிச் சூட்டில் பாதாளக் குழு உறுப்பினர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

காலி, தெல்வத்த – மீட்டியகொட பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த நபர் பலப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார் .

இவ்வாறு உயிரிழந்துள்ள நபர் 42 வயதுடைய குடும்பஸ்தர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் பாதாளக் குழு உறுப்பினர் ஒருவர் பதுங்கி இருக்கின்றார் என்று கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸ் விசேட அதிரடிப் படை அதிகாரிகள் அந்த இடத்துக்குச் சென்றுள்ளனர்.

அப்போது, வீட்டில் பதுங்கியிருந்த சந்தேகநபர் துப்பாக்கியால் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரை 04

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally





# உலகில் எரிபொருள் நெருக்கடி: இலங்கையில் மீண்டும் கியூ.ஆர்.!

## வாசுதேவ நாணயக்கார எம்.பி. சுட்டிக்காட்டு

தற்போதைய உலகளாவிய ரீதியில் எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் இலங்கையில் எரிபொருளின் விலை உயரும் என்றும் கியூ.ஆர். முறை மீண்டும் நடைமுறைக்கு வரவுள்ளது எனவும் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அதேவேளை பொருள்களின் விலையும் பெரிய அளவில் உயரும் . எரிபொருள் விலையை அதிகரிக்காமல் இருப்பதே இதற்கு ஒரே தீர்வு.

உலகில் நிலவும் யுத்த சூழல், எதிர்வரும் குளிர்கால காலநிலை, எரிபொருள் போக்குவரத்துக்காக அறவிடப்படும் காப்புறுதிக் கட்டண அதிகரிப்பு, எரிபொருள் விநியோகம் குறைவடைந்தமை போன்ற காரணங்களால் எரிபொருள் விலை உயரும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

உத்தர லங்கா கூட்டமைப்பினரின் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# யானை தாக்கி 4 இடங்கள் சேதம்!



(ஷிகான் பாறூக், அஸ்ஹர் இப்றாஹிம்)

ஒரே நாளில் யானை தாக்கி 4 இடங்கள் சேதமடைந்துள்ள சம்பவம் ஒன்று நேற்று (11) அதிகாலை அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் உள்ள சம்மாந்துறை 08 கிராம சேவையாளர் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

தனியான் யானை ஒன்று வந்து சென்றாதாக அப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இதன்போது காட்டு யானை அப் பிரதேசத்தில் உள் நுழைந்து பயன்தரும் வாழை, பயிர்களை சேதப்படுத்தி உள்ளது. வீட்டின் சுவர்களும் உடைக்கப்பட்டுள்ளன. களஞ்சியப் படுத்தப்பட்டிருந்த நெல் மூட்டைகளும் சேதப்படுத்தப்படுத் தப்பட்டுள்ளன.

# காசாவில் கொல்லப்பட்ட 11 ஐ.நா. பணியாளர்கள்!

காசா பகுதியில் 11 ஐ.நா. பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாலஸ்தீனிய அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் முகவரமைப்பின் துணை இயக்குனர் ஜெனிபர் ஒஸ்டின் வெளியிட்ட அறிக்கையில், தனது சக ஊழியர்களின் மரணத்தை உறுதிப்படுத்துவதில் வருத்தம் அடைகிறார் என்று தெரிவித்துள்ளார்.

இறந்தவர்களில, பாலஸ்தீனிய அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் முகவரமைப்பின் பாடசாலைகளின் ஐந்து ஆசிரியர்கள், ஒரு மகப்பேற்று மருத்துவர், ஒரு பொறியாளர், ஒரு உளவியல் ஆலோசகர் மற்றும் மூன்று துணை ஊழியர்கள் அடங்குகின்றனர் என்று அவர் குறிப்பிட்டார்.

சிலர் தங்கள் குடும்பங்களுடன் தங்கள் வீடுகளில் இருந்த வேளை கொல்லப்பட்டனர் என்று ஒஸ்டின் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பாலஸ்தீனிய அதிகாரசபையின் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், காசா மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களால் பணியில் இருந்த நான்கு ரெட் கிரசென்ட் துணை மருத்துவர்கள் கொல்லப்பட்டனர் என்று தெரிவித்துள்ளது.

# இலங்கைக்குக் கடன் மன்னிப்பு வழங்கச் சீனா முன்வரவேண்டும்

## பிலிப்பைன்சின் நிதியமைச்சர் பெஞ்சமின் ஈ டியோகோனோ ஆலோசனை

இலங்கைக்கு கடன் மன்னிப்பை வழங்குவது தொடர்பில் சீனா ஆராய வேண்டும் என்று பிலிப்பைன்சின் நிதியமைச்சர் பெஞ்சமின் ஈ டியோகோனோ ஆலோசனை கூறியுள்ளார்.

கொவிட் பெருந்தொற்றின் பின்னர் பிலிப்பைன்ஸ் எதிர்கொண்ட பொருளாதார சவால்களை நினைவு கூர்ந்துள்ள அந்த நாட்டின் நிதியமைச்சர் வலுவான கட்டமைப்பு சீர்திருத்தங்களே நாடு மீண்டும் வலுவான நிலைக்கு வருவதற்கு உதவியது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுகுறித்து மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்–

இலங்கைக்கு கடன்மன்னிப்பை வழங்குவது குறித்து சீனா ஆராய வேண்டும். இல்லாவிட்டால் இலங்கையின் பொருளாதாரம் தொடர்ந்தும் பல வீனமாகவே காணப்படும்.

இது முன்னர் இடம்பெற்றுள்ளது. தற்போதும் அதனை செய்யலாம். இலங்கை தனது வளங்களை திரட்டுவதை மதிப்பீடு செய்யவேண்டும். இதனை செய்தால் இலங்கையால் சர்வதேச நிதியமைப்புகளின் உதவிகளை பெறுவது இலகுவாக அமையும்.

இலங்கை தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக விரக்தியடையாமல் சவால்களை எதிர்கொள்ள வேண்டும்.– என்றார்.

## மின் கட்டணம் செலுத்தாமையால்

# மின் இணைப்பைத் துண்டித்த ஊழியர்கள் மீது தாக்குதல்!

(ரஸீன் ரஸ்மின்)

மதுரங்குளி – முக்குத் தொடுவா பிரதேசத்தில் மின்சாரத்தை துண்டிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் இருவர் மீது மணல் விற்பனை செய்யும் வர்த்தகர் உள்ளிட்ட சிலர் கடுமையாக தாக்கியுள்ளனர் என்று மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த இருவரும் புத்தளம் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான புத்தளம் மின்சார அதிகார சபை அலுவலகத்தில் மின் இணைப்பை துண்டிக்கும் பணியில் ஈடுபடும் இரண்டு ஊழியர்களே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மணல் விற்பனை செய்துவரும் வர்த்தகரின் வியாபார தளத்தில் மின்சாரத்தை துண்டித்துவிட்டு திரும்பி வந்து கொண்டிருந்த போதே சந்தேக நபர்கள் அவர்கள் இருவரையும் மறைத்து நின்று தாக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மின்சாரத்தை துண்டிக்கும் ஊழியர்கள் இருவரும் குறித்த இடத்துக்கு மின்சாரத்தை துண்டிப்பதற்காக சென்ற போது, அங்கிருந்த பெண்ணொருவரிடம் தெரிவித்துவிட்டே மின்சாரத்தை துண்டித்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

எனினும், மின்சார பட்டியலை செலுத்திவிட்டு தங்களுக்கு அறியத்தந்தால் மீண்டும் வந்து மின் இணைப்பை வழங்குவதாகவும் அந்த ஊழியர்கள் அங்கிருந்த பெண்ணிடம் தெரிவித்துள்ளனர் என்றும் குறிப்பிட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இருவேறு விபத்துக்களில் இரண்டு பேர் உயிரிழப்பு!




நாட்டின் இருவேறு பிரதேசங்களில் இடம்பெற்ற இரண்டு வீதி விபத்துக்களில் பெண் ஒருவரும் ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

தம்புள்ளை – மாத்தளை பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (11) இரவு கவுடுபெலெல்ல பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற பெண்ணும் மோட்டார் சைக்கிளில் பயணித்த 4 வயது குழந்தையும் மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது பெண் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பள்ளியவத்தை, மஹவெல பிரதேசத்தை சேர்ந்த 33 வயதுடையவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கவுடுபெலெல்ல பிரதேசத்தில் கிளை வீதியில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் பிரதான வீதிக்குள் நுழைய முற்பட்ட போது அனுராதபுரத்தில் இருந்து கண்டி நோக்கி பயணித்த பஸ் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் மாத்தளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மஹவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை பஸ்யால மீரிகம வீதியில் பொஹொன்னருவ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 40 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பஸ்யால பகுதியிலிருந்து மீரிகம நோக்கி பயணித்த ஓட்டோ எதிர்திசையில் வந்த கெப் ரக வாகனத்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் படுகாயமடைந்த ஓட்டோ சாரதி மீரிகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

விபத்துடன் தொடர்புடைய வாகன சாரதியைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை மீரிகம பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

# மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் குடிதண்ணீர்!

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வழங்கியது

அண்மையில் பெய்த கடும் மழையால் பாதிக்கப்பட்ட காலி மற்றும் மாத்தறை மாவட்ட மக்களுக்கு 15 ஆயிரம் குடிதண்ணீர் போத்தல்கள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ பிரமித்த பண்டார தென்னகோனிடம் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வு கொழும்பில் உள்ள அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்திலுள்ள இராஜாங்க அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள கிணறுகள் மற்றும் நீர் வழங்கல் சபையின் குடி தண்ணீர் வளங்கள் கடுமையாக மாசுபட்டுள்ளதால், தற்போது காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் பல பகுதிகள் கடுமையான குடி தண்ணீர் தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, மக்களின் குடி தண்ணீர் தேவைக்கு உடனடி நிவாரணமாக இலங்கை செஞ்சிலுவை சங்கம் இந்தத் தண்ணீர் போத்தல்களை வழங்கியுள்ளது என்று இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் சிரேஷ்ட உப தலைவர் ஜகத் அபயசிங்க தெரிவித்தார்.

வெள்ளம் காரணமாக வீடுகள், விவசாய நிலங்கள் உள்ளிட்ட சொத்துக்களுக்குப் பரவலான சேதம் ஏற்பட்டுள்ளது. இப்பகுதிகளில் கல்வி மற்றும் வணிக நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது. இதனால் இந்த மக்களின் அன்றாட வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதற்குத் தேவையான நிவாரணங்களை வழங்குவதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியையும் பெற்றுக் கொள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வேண்டுகோள் விடுக்க வேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் தென்னகோன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் கலாநிதி அமில கங்காணமகே மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மேலதிகச் செயலாளர் கே.ஜி. தர்மதிலக ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## கடற்கரையிலிருந்து...

மனிதத் தலை மீட்கப்பட்டுள்ளது என்று பமுனுகம பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட தலை அடையாளம் காண முடியாத அளவுக்குச் சிதைந்துள்ளது என்றும் பமுனுகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மனிதத் தலை தொடர்பில் நீதிவான் விசாரணை நடத்தப்படவுள்ளது என்று மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பமுனுகம பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## வெள்ளத்தில் அடித்து...

பகுதியிலுள்ள ஆற்றிலிருந்து பெருக்கெடுத்த வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட 10 வயது மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை காணாமல்போன மாணவனின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது.

நேற்று மதியம் புலமைப் பரிசில் பரீட்சைக்கான மேலதிக வகுப்பில் கலந்துகொண்டுவிட்டு அந்த மாணவன் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட இடத்திலிருந்து சுமார் 3 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இடத்தில் மாணவனின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

## பாதாளக் குழுவை...

நோக்கிச் சுட்டுள்ளார்.

தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் போது சந்தேகநபர் சுடப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த நபர், அண்மையில் காலி, கராகொட பிரதேசத்தில் இனந்தெரியாத இருவரால் சுட்டுக் கொல்லப்பட்ட முன்னாள் பொலிஸ் பரிசோதகர் தெடிமுணி பாலேந்திரசிங்கவின் கொலைச் சம்பவத்தின் சந்தேக நபர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## விக்கி வைத்தியரை...

பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

“அந்தக் கடிதங்கள் இந்தியப் பிரதமரிடம் சென்றடைந்துள்ளன.

விக்னேஸ்வரன் வெகுவிரைவில் வைத்தியர் ஒருவரைச் சந்திக்க வேண்டும் என்றுதான் நான் நினைக்கின்றேன். இந்திய வெளிவிவகார அமைச்சர் எங்களைச் சந்தித்தபோது இந்த விடயங்கள் (கடிதங்கள்) பிரதம மந்திரியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன என்று தெளிவாகவே சொல்லியிருந்தார். அதற்கு முன்னர் கடிதங்களை எடுத்துச் சென்ற இந்திய உயர்ஸ்தானிகர், அந்தக் கடிதங்களை இந்தியப் பிரதமரிடம் கையளித்தவுடனேயே புதுடில்லியிருந்து எனக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்து கடிதங்களைப் பிரதமரிடம் கையளித்து விட்டேன் என்று அறிவித்திருந்தார். எனவே, எல்லாக் கடிதங்களுடம் இந்தியப் பிரதமரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் மற்றும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பக்லே ஆகியோர் அதனை எம்மிடம் உறுதிப்படுத்தியுள்ளார்கள். ஆகவே, அவர்கள் அது தொடர்பில் எங்களுக்குப் பொய் சொல்ல வேண்டிய தேவையும் இல்லை பொய் சொல்லியிருப்பார்கள் என்று நான் நினைக்கவும் இல்லை. விக்னேஸ்வரனுக்கு மறதி வியாதி ஏற்பட்டிருக்கலாம். அது வேறு பிரச்சினை.

இந்தியப் பிரதமரைச் சந்திப்பது தொடர்பில் விக்னேஸ்வரன் மின்னஞ்சலில் (இப்போது) அனுப்பிய கடிதம் எனக்குக் கிடைக்கவில்லை. நான் கட்சித் தலைவர் இல்லைதானே. கட்சித் தலைவர்களுக்குத்தான் அவர் கடிதம் அனுப்பியுள்ளார் என்று ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் முக்கியமான விடயங்கள் தொடர்பில் என்னுடன் கலந்துரையாடுவார். ஆனால், விக்னேஸ்வரனின் கடிதத்தை அவர் முக்கியமான விடயமாகக் கருதவில்லையோ தெரியவில்லை, அந்தக் கடிதம் தொடர்பில் என்னுடன் சம்பந்தன் எதுவும் பேசவில்லை.

இந்தியாவின் முக்கிய வகிபாகத்தை நன்றாக அறிந்த தலைவர்தான் சம்பந்தன். அதற்கேற்ற மாதிரி அவரின் செயற்பாடுகள் இருக்கும்.” - என்றார்.

உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாக பதவியை இராஜினாமா செய்துவிட்டு நாட்டை விட்டு வெளியேறியுள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தொடர்பில் விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவித்த சர்ச்சைக்குரிய (மொழிப் பிரச்சினை) கருத்து குறித்தும் சுமந்திரன் எம்.பியிடம் கேள்வி கேட்டபோது -

“சட்டமா அதிபருக்கும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற உரையாடல் சம்பந்தமாகவே விக்னேஸ்வரன் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். நான் ஏற்கனவே சொல்லியுள்ளேன் அந்த உரையாடல் தொடர்பில் எவரும் எந்தக் கருத்துக்களையும் சொல்ல முடியாது. ஆகவே, விக்னேஸ்வரன் கற்பனையில் சொல்லுகின்ற விடயங்களுக்கு நான் பதிலளிக்க முடியாது.” - என்றார்.

# பிரம்படிப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு



## முதலாம் பக்கத் தொடர்ச்சி

1987 ஆம் ஆண்டு இதே மாதம் 11,12 ஆம் திகதிகளில் கொக்குவில் - பிரம்படிப் பகுதியில் 50 இற்கும் மேற்பட்ட பொதுமக்களைக் கொடூரமாக இந்திய இராணுவம் கொலை செய்தது.

அந்தப் படுகொலையின் 36 ஆவது நினைவு தினம் நல்லூர் பிரதேச சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மற்றும் இறந்தவர்களின் உறவுகளால் நினைவேந்தப்பட்டது.

இதன்போது வீதியோரமாக அமைந்துள்ள நினைவுத் தூபியில் சுடரேற்றி மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் சமூகச் செயற்பாட்டாளர் மு.தமிழ்மணியால் படுகொலை தொடர்பான நினைவு உரை ஆற்றப்பட்டது.



# கல்முனை இராமகிருஷ்ண ம. வியில் புனரமைக்கப்பட்ட மண்டபம் திறப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் மீளப் புனரமைக்கப் பட்ட விபுலானந்த மணி மண்டபம் நேற்று (11) புதன்கிழமை காலை அதிபர் திருமதி விஜயசாந்தினி நந்தபால தலைமையில் திறந்து வைக்கப்பட் டது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக சிவஸ்ரீ சச்சிதானந்தசிவக்குருக்கள், கல்முனை வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வரணியா சாந்த ரூபன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சரவணமுத்து, உதவிக் கல்விப் பணிப்பாளர்களான ஆ.சஞ்சீவன், வி.ரி.சகாதேவராஜா, கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் சமூக செயற்பாட்டாளருமான சந்திர சேகரம் ராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த 5 வருடங்களாக விபுலா னந்தா மணி மண்டபம் பழுதடைந்த நிலையில் இருந்த வேளையில், கல்முனை முன்னாள் மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரன் ராஜனின் வேண்டுகோளுக்கு இணங்க லண்ட னில் வாழும் பாண்டிருப்பைச் சேர்ந்த திருமதி வனிதா இராஜகுமார் சுமார் 20 லட்சம் ரூபா செலவில் மண்டபத்தை மீள அமைத்துக் கொடுத்திருந்தார்.



# விளையாட்டு வேலைத் திட்ட மதிப்பீட்டில் யுனிசெவ்!

(வி.ரி.சகாதேவராஜா)

யுனிசெவ் ஆஸ்திரேலியா பிரதி நிதிகள் குழுவொன்று நேற்று முன் தினம் (10) சம்மாந்துறை வலயத்தின் சொறிக்கல்முனை ஹோலி குறோஸ் மகா வித்தியாலயத்துக்கு விஜயம் செய்தது.

அபிவிருத்திகான விளையாட்டு என்ற நிகழ்ச்சி திட்டத்தை மதிப்பீடு செய்வதற்காக வருகைதந்த இந்தக் குழுவினர், விவியன் ஹாவே வொங்க் தலைமையில், பாடசாலைத் தரிசிப்பையும் கலந்துரையாடலையும் மேற்கொண்டனர்.

முன்னதாகப் பாடசாலை அதிபர் அருட்சகோதரி சிறிய புஷ்பம் தலை மையில் குழுவினருக்கு பாரம்பரிய மற்றும் பாண்ட் வாத்தியம் சகிதம் பெரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஆஸ்திரேலிய பிரதிநிதிகள் குழுவின் தலைவர் விவியன் ஹாவே வொங்க் தலைமையிலான குழுவில், கிழக்கு மாகாண யுனிசெவ் பொறுப் பாளர் நிபால் அலாவுதீன், கிழக்கு மாகாண கல்வி திணைக்கள பிரதிநிதி எஸ்.சஹீத், இந்த வேலைத் திட்டத்துக் குப் பொறுப்பான சம்மாந்துறை வலய உடற் கல்விப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.நசீர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உறைப்பாக உரைப்போம்!

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஏழு ஒன்றிணைந்து இந்தியப் பிரதமர் மோடிக்குக் கடிதம் எழுத தீர்மானித்திருக்கின்றன என்று செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

மோடியைச் சந்திக்க வாய்ப்புக் கிடைக்கின்றதோ இல்லையோ, சில விடயங்களைத் தமிழர் தரப்பிலிருந்து உறுதியாக இந்தியத் தரப்புக்குத் தெளிவுபடுத்த வேண்டிய வேளை வந்துவிட்டது.

இந்தியாவைத் தவிர்த்து ஈழத்தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்பது வாஸ்தவம்தான். அதற்காக ஈழத் தமிழர் விவகாரத்தை நேர்மையாக - வெளிப்படையாக - உண்மையாக - நீதி முறையாக - தனக்குரியதும், தானாகவே தலையிட்டுத் தான் வரித்துக் கொண்டதுமான கடப்பாட்டின்படியாக - கையாள புதுடில்லி தயார் இல்லை என்ற நிலையில், தொடர்ந்து புதுடில்லியைக் கட்டிப் பிடித்து அழுது கொண்டோ அல்லது நம்பி காத்திருந்து இன்னும் பல தசாப்த காலம் ஏமாளியாக அலைவதிலோ அர்த்தம் இல்லை.

ஈழத் தமிழர் தரப்பு தீர்க்கமான ஒரு முடிவுக்கு வர வேண்டும். அந்த முடிவை இந்தியாவுக்கு தெரியப் படுத்த வேண்டும். தொடர்ந்தும் பிச்சைப்பாத்திரம் ஏந்தும் யாசகர்கள் போல கெஞ்சிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

இந்தச் சூழலில் இந்தியாவுக்கோ, மோடிக்கோ எழுதப் படும் கடிதத்தில் அல்லது இடம்பெறக் கூடிய சந்திப்பில் ஒரு முக்கியமான விஷயத்தை தமிழர் தரப்பு வெளிப்படையாகப் பேச வேண்டும். சுட்டிக்காட்ட வேண்டும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் புதுடில்லியும் கொழும்பும் செய்து கொண்டது. அந்த ஒப்பந்தத்தின் வாசகங்களை நடைமுறைப்படுத்துவதற்காகத்தான் 13 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதை நடைமுறைப்படுத்த இலங்கை மறுக்குமானால் அது முதல் தோல்வி இந்தியாவுக்கே தவிர, இந்தியா அந்த வேலையை யாருக்காகத் தான் செய்ய முற் பட்டதாக அது கூறுகின்றதோ அந்தத் தரப்பான ஈழத் தமிழருக்கு அல்ல.

13 ஆம் திருத்தத்தின் நடைமுறையாக்கம் சாத்தியப்படாவிட்டால் அதன் முதல் தோல்வி புதுடில்லிக்குத்தான். அற்ப சிறிய நாடான கொழும்பு பாரத உபகண்டத்துக்கு கடந்த 36 வருடங்களாக காட்டிவரும் ஏமாற்று நாடகம் என்பதை இந்தியாவுக்கு உறைப்பாக - வெளிப்படையாக - புதுடில்லி ராஜதந்திரத்தின் மனதில் தைக்கத்தக்கதாக - உரைக்க வேண்டும்.

அடுத்து புதுடில்லித் தரப்பு நீண்ட காலமாக ஒரு கதை விட்டு வருகிறது. அது - தமிழ்த் தேசியத் தரப்புகள் தங்களுக்குள் ஒன்றுபட்ட நிலையில் இல்லாதமையால்தான் 13 ஆம் திருத்தத்தைக் கூட நடைமுறைப்படுத்துமாறு கொழும்பை வலியுறுத்த முடியவில்லை, ஆகவே ஒற்றுமைப்பட்டு வாருங்கள் என்ற பேச்சுத்தான். இந்தக் கதையை இத்தோடு முடிக்கும்படி பட்டவர்த்தனமாக இந்தியாவுக்கு உரைக்க வேண்டிய காலம் வந்து விட்டது.

ஏதோ 1987 இல் ஈழத்தமிழர் தரப்புகளை எல்லாம் ஒற்றுமைப்படுத்தி வைத்து, அவர்களின் இணக்கத்தோடுதான் கொழும்புக்கு வந்து இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை கையெழுத்திட்ட மாதிரி புதுடில்லிப் பிரமுகர்களினதும், ராஜதந்திரிகளினதும் கதைகள் இருக்கின்றன. தமிழர் தரப்பை பலவந்தமாக அமுக்கி அழுத்தம் கொடுத்தபடிதான் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைத் தமிழர் தலையிலும் சேர்த்துத் திணித்தது அன்றைய பாரதம். அதே அழுத்தத்தைக் கொழும்புக்கு கொடுத்து, அதன் கீழான 13 ஆவது திருத்தத்தை மறுகேள்வியின்றி நடைமுறைப்படுத்துமாறு இறுக்கமாக வலியுறுத்திச் செய்விக்க வைப்பதே புதுடில்லியின் தார்மீகப் பொறுப்பு. அதை விடுத்து, தமிழர் ஒற்றுமையின்மை என்று காட்டி தத்துவம் பிளப்பது அல்ல என்பதையும் தமிழர்கள் வெளிப்படையாகப் புதுடில்லிக்குக் கூற வேண்டிய காலம் இப்போது கூடப் பிந்தி விட்டதுதான்.



## கபே அமைப்பின் பிரதிநிதிகளுடன் முன்னாள் ஆணையாளர் சந்திப்பு!

(ஹஸ்பர்)

முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய மற்றும் கபே அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு இடையிலான கலந்துரையாடல் ஒன்று செவ்வாய்க்கிழமை கொழும்பு ராஜகிரியவில் அமைந்துள்ள கபே தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பின் போது, தொடர்ச்சியாக தேர்தல்கள் பிற்போடப்படுவதன் பாதகங்கள், அரசியலில் பெண்களின் வகிபாகங்கள், பெண் அரசியல்வாதிகள் எதிர்கொள்ளக் கூடிய சவால்கள் மற்றும் சவால்களை எதிர்கொண்டு அரசியலில் பெண்கள் நிலைத்திருக்க செய்வதன் அவசியம் போன்றவை தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

கலந்துரையாடலின் போது கபே தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் சார்பாக அதன் நிறைவேற்று பணிப்பாளர் மனாஸ் மகீன், நிர்வாக பணிப்பாளர் சுரங்கி ஆரியவங்ஷ, சட்டத்துறை பணிப்பாளர் ஹரேந்திர பானகல ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மேற்படிப்புக்காக புலமைப் பரிசில்



(சப்னா றிபாஸ்)

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளராக கடமையாற்றும் அட்டாளைச்சேனையை சேர்ந்த அப்துல் சமது சியாத் தனது மேற்படிப்புக்காக புலமை பரிசில் பெற்று ஜப்பான் பயணமாகியுள்ளார்.

வெள்ள அனர்த்த பாதுகாப்பு குறைப்பு விஷேட முதுமாணிக் கற்கையைத் தொடர்வதற்காக ஜப்பான் டோக்கியோவில் அமைந்துள்ள தேசிய பட்ட நிறுவன கொள்கைகள் கற்கைக்கான பல்கலைக் கழகத்தில் கற்கை நெறியைத் தொடரவுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் சிபாரிசில் புலமைப் பரிசில் பெற்று ஒரு வருடகால கற்கைக்காக ஏ.எஸ்.சியாத் சென்றுள்ளார்.

## 2 ஆயிரம் கிலோ எடை கொண்ட புள்ளிச் சுறா மீன் கரை ஒதுங்கியது

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – கங்கைவாடி பகுதியில் புள்ளிச்சுறா மீனொன்று உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது.



இந்தச் சுறா மீன் வலையில் சிக்குண்டு உயிரிழந்த நிலையில் நேற்றுமுன் தினம் (10) கரை யொதுங்கியது என்று புத்தளம் வனாத் தவில்லு வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு கரையொதுங்கிய புள்ளிச்சுறா மீன் சுமார் 25 அடி நீளமுடையது எனவும் 2000 கிலோ கிராம் எடையுடையது என்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தப் புள்ளிச் சுறா மீனைப் பார்வையிடுவதற்காக புத்தளம், கற்பிட்டி, பாலாவி உள்ளிட்ட பல பகுதிகளில் இருந்து பொது மக்கள் வருகை தந்தனர்.



# கடலட்டை பிடிக்கச் செல்லும் தொழிலாளர்கள் சிரமத்தில்

**(மன்னார் நிருபர்)**

மன்னார் பள்ளிமுனை கடற்கரையில் இருந்து அட்டை பிடிக்க கடலுக்குச் செல்லும் பள்ளிமுனை கிராம மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இந்த நிலையில் இன்று கடற்படையினரும் அவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தியுள்ளனர் என்று மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இன்று (12) வியாழக்கிழமை காலை பள்ளிமுனை கடற்கரையில் இருந்து கடலட்டை பிடிக்க தொழிலுக்குச் செல்ல முயன்ற போது தொழிலாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களின் பின்னர் தற்போது கடலட்டை பிடிக்கும் சீசன் என்பதால் மீனவர்கள் கடலட்டை பிடிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த காலங்களில் படகு ஒன்றில் சுமார் 10 பேர்வரை கடலட்டை பிடிக்க சென்று வந்தனர்.

தற்போது படகு ஒன்றில் 8 சிலிண்டர்களுடன் 3 பேர் மாத்திரமே தொழிலுக்குச் செல்ல முடியும் என்று மன்னார் கடற்றொழில் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனால் மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

தற்போது எரிபொருள் விலையேற்றம் காரணமாக ஒரு படகில் 7 அல்லது 8 பேர் வரை செல்கின்றோம். இரண்டு படகில் செல்ல வேண்டியவர்கள் ஒரு படகில் சேர்ந்து தொழிலுக்குச் செல்கின்றோம்.

இன்றைய தினம் (12) படகு ஒன்றில் 3 பேர் மாத்திரமே செல்ல முடியும் என்று கடற்படை அறிவித்தது. இதனால் மீனவர்கள் தொழிலுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.இதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

அது மாத்திரமன்றி மீன் பிடிக்கச் சென்றால் மீன் மாத்திரமே கொண்டு வர முடியும். அட்டை பிடிக்கச் சென்றால் அட்டை மாத்திரமே பிடித்துவர முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளால் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மீனவர்கள் கடலில் ஒரு தொழிலை மட்டுமே நம்பிச் செல்ல முடியாது.

எனவே கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுத் தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

உரிய தீர்வு இல்லாது விட்டால் போராட்டத்தை முன்னெடுக்க உள்ளனர் என்று பள்ளிமுனை மீனவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## சேவை நலன் பாராட்டு...

**(அஸ்ஹர் ஆதம்)**

கல்முனை மாநகர சபையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி சுந்தரி நேசசிறிக்கான பிரியாவிடை நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அரச சேவையின் கௌரவத்தை பாதுகாக்கும் வகையில் அர்ப்பணிப்புடன் செயலாற்றி ஓய்வு பெற்று செல்லும் இவர் பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.





## சிறுகதைக்குத் தேசிய விருது...

**(அஸ்ஹர் ஆதம் )**

சப்ரகமுவ பல்கலைக்கழக விரிவுரையாளர் லறீனா அப்துல் ஹக்கின் மொழி பெயர்ப்புச் சிறுகதை தொகுதிக்குத் தேசிய விருது கிடைத்துள்ளது.

இதனையொட்டி இவரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வொன்று அண்மையில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் உதய ரத்னாயக்க அவருக்கு நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவித்தார்.



# கிழக்கு கல்வி அமைச்சின் செயலாளர் மனார் மத்திய கல்லூரிக்கு விஜயம்

(நூருல் ஹுதா உமர்)

மருதமுனை அல்- மனார் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க பொருளாளரும், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினருமான எம்.ஐ.எம். வலீதின் அழைப்புக்கு இணங்க கல்லூரிக்குக் கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபிள்யு.ஜி.திஸாநாயக்க விஜயம் செய்துள்ளார்.

இதன்போது மாகாண கல்வித் திணைக்களத்திடம் இருந்து கிடைக்கப்பெற்ற நிதி தொடர்பிலான ஆவணங்கள் பாடசாலை முகாமைத்துவத்தினரின் முன்னிலையில் கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபிள்யு.ஜி.திஸாநாயக்கவால் பாடசாலை அதிபர் ஐ.உவைத்துல்லாவிடம் கையளிக்கப்பட்டது.



பாடசாலைக்கு நேரடியாக விஜயம் செய்து பாடசாலையின் குறை நிறைகளையும், கல்வி மேம்பாட்டு வேலைத் திட்டங்களையும், அடைவுமட்ட உயர்வுக்கான வழிவகைகளையும், பௌதீக தேவைகள் தொடர்பிலும் கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் கேட்டறிந்தார்.

உயர்தரப் பிரிவுக்கான ஆசிரிய ஆளணி மற்றும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

இந்த நிதி கிடைக்கக் காரணமாக இருந்த பழைய மாணவர் சங்க பொருளாளரும், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினருமான எம்.ஐ.எம். வலீத், வலயக் கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.எஸ். நஜீம், வலயக்கல்வி அலுவலகக் கணக்காளர் வை. ஹபிபுல்லாஹ், கல்வி மாவட்ட பொறியலாளர் ஏ.எம். சாஹீர், மாகாண கல்வித் திணைக்களப் பிரதம கணக்காளர் ஏ.எம். றபீக், கிழக்கு மாகாண முன்னாள் கல்வி பணிப்பாளர் அகிலா கனகசூரியம், கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபிள்யு.ஜி.திஸாநாயக்க உட்பட பலருக்கும் பாடசாலை சமூகம் நன்றிகளை தெரிவித்தது.

# ‘வெய்யில் மனிதர்கள்’ நூல் அறிமுக விழா

(அஷ்ரப் ஏ சமட் )

இலங்கை நெய்னார் காப்பகத்தின் ஏற்பாட்டில் எழுத்தாளர் அஷ்ரப் ஷிஹாப்தீன் மொழிபெயர்த்த ‘வெய்யில் மனிதர்கள்’ நூல் அறிமுக விழா கொழும்பு தெமட்டகொட வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் சனிக்கிழமை (07) நடைபெற்றது.

மூத்த எழுத்தாளர் அல் அஸூமத் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பத்திரிகையாளரும் தொழிலதிபருமான பஷீர் அலி முதற்பிரதியையும் இம்ரான் நெய்னார் சிறப்பு பிரதியையும் பெற்றனர்.

பிரதம அதிதியாகப் பலஸ்தீன தூதரக முதல் செயலாளர் பதில் தூதுவர் ஹிஷாம் அபு தாஹாவிடம் இருந்து பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர்.



# அட்டாளைச்சேனை கல்வியியல் கல்லூரிக்கு ஆசிரிய மாணவர்கள் இணைக்கும் அமர்வு




(எம் எப். நவாஸ் )

அட்டாளைச்சேனை கல்வியியல் கல்லூரிக்கு 2019 - 2020 உயர்தர பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களை ஆசிரியர் பயிலுனர் பயிற்சிக்கு உள்ளீர்க்கும் நிகழ்வு கல்லூரியின் கேட்போர் கூடத்தில் பீடாதிபதி சட்டத்தரணி கே. புண்ணியமூர்த்தி தலைமையில் இன்று ஆரம்பமாகியது. நாளையும் இந்த நிகழ்வு இடம் பெறும்.

இந்த ஆசிரியர் பயலுனர் 384 பேரில் இன்று 192 மாணவர்களும் நாளைய அமர்வில் 192 மாணவர்களுமாக இரு அமர்வுகளாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் உப பீடாதிபதி எம் சி ஜுனைதீன், பதிவாளர் எம்.ஜிப்ரீ, நிர்வாக இணைப்பாளர் எம் எச் எம். மின்வர் மற்றும் ஏனைய பீடாதிபதிகள் விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர்.



# மாகாண மட்டத்தில் முதலிடம்!

( ஹஸ்பர் )

அகில இலங்கை அழகியல் நடனப் போட்டியில் மாகாண மட்டத்தில் திருகோணமலை கப்பல்துறை சரஸ்வதி வித்தியாலய மாணவர்கள் தப்பு நடனத்தில் முதலிடம் பெற்று தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

மட்டக்களப்பு மகஜனாக் கல்லூரியில் இடம் பெற்ற மாகாண மட்ட அழகியல் நடனத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இவர்களை நெறிப்படுத்திய நடன ஆசிரியை திருமதி. யசோதினி குகாந்தன் இவ் நடனத்தின் பாடல் ஆக்கம், இசையமைப்பு ஆசிரியர் இதயநேசன் மற்றும் வித்தியாலய அதிபர் திருமதி. தவவாசுகி ரமணன் ஆகியோரை கல்விச் சமூகம் பாராட்டியுள்ளது.

# சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் குழு ஒன்றுகூடல்

(நூருல் ஹுதா உமர் )

சாய்ந்தமருதில் சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்த சாய்ந்தமருது 08 ஆம் பிரிவின் சிவில் பாதுகாப்பு குழுவின் ஒன்றுகூடல் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பரிசோதகர் வை.பி. அய்யூப் தலைமையிலும் பொலிஸ் உத்தியோகத்தர் எஸ். அக்பர் ஒருங்கிணைப்பிலும் சாய்ந்தமருது அல்-ஜலால் பாடசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது 08 ஆம் பிரிவின் கிராம நிலதாரி எ. நஜீபா, சிவில் பாதுகாப்பு குழுவின் தலைவர் அபுல் ஹசன், உப தலைவர் எஸ். ஏ. முஹம்மட் அஸ்லம், நிர்வாக உத்தியோகத்தர்கள், பொது நிறுவனத் தலைவர்கள், பெண்கள் என பலர் கலந்து கொண்டனர்.





# உயர்கல்வி தொடர்பான ஆலோசனை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மெற்றோபொலிடன் கல்லூரி ஒழுங்கு செய்திருந்த பாடசாலை மாணவர்களுக்கான உயர்கல்வி தொடர்பான ஆலோசனையும் வழிகாட்டலும் மெற்றோபொலிடன் கல்லூரியின் தவிசாளரும், முன்னாள் கல்முனை மாநகர மேயருமான கலாநிதி ஸிராஸ் மீராஸாஹிப் பிரசன்னத்துடன் இடம் பெற்றது.

கொழும்பு, இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு இராமநாதன் பெண்கள் இந்துக் கல்லூரி மாணவர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# சமூகசேவை உத்தியோகத்தர்களுக்கு சமூக மட்ட புனர்வாழ்வுப் பயிற்சி நெறி

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் சமூக சேவைகள் திணைக் களத்தின் ஏற்பாட்டில் சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளரின் அறிவு றுத்தலுக்கு அமைய சமூக மட்ட புனர் வாழ்வு தொடர்பான பயிற்சி நெறி இடம் பெற்றுள்ளது.

மேலதிக அரச அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ் தலைமையில் நேற்று (11) திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் இது நடைபெற்றது.

இந்தப் பயிற்சி நெறியானது திருகோணமலை மாவட்டத்திலுள்ள சமூக சேவைகள் உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் நடைபெற்றமை குறிப்பிடத் தக்கது. தொடர்ச்சியாக இருநாள்களுக்கு இப் பயிற்சி நெறி ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.



மாற்றுத் திறனாளிகளை வீட்டு மட்டத்தில் எவ்வாறு புனர்வாழ்வு செய்வது என்பதே இப்பயிற்சி நெறியின் பிரதான நோக்கமாகும். வளவாளராக சமூக மட்ட புனர்வாழ்வு இணைப்பாளர் டி.அஜித் சேரசிங்க கலந்து கொண்டார்.

இந்தப் பயிற்சி நெறியில் மாவட்ட சமூக சேவைகள் திணைக்கள இணைப் பாளர் த.பிரணவன், சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொழில் நுட்பக் கட்டடம் திறப்பு

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – கரைத்தீவு முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இருமாடி தொழில் நுட்பக் கட்டடம் நேற்று (11) வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் ஏ.கே.நயீமுல் லாஹ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடமேல் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் உட்பட உள்ளூர் அரசியல் பிரமுகர்கள், கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

“அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை” என்னும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ்இந்த இரு மாடி தொழிநுட்பக் கட்டடம் நிர்மாணிக் கப்பட்டது.

இவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட தொழிநுட்பக் கட்டடத்தை வடமேல் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன பிரதம அதிதியாக கலந்துகொண்டு கையளித்தார்.

புதிதாக திறக்கப்பட்ட தொழில்நுட்ப கட்டடத்துக்கான தளபாடங்களை முழுமையாகப் பெற்றுக் கொடுப்பதாக வடமேல் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன இதன்போது குறிப்பிட்டார்.

# வறுமை ஒழிப்பு வாரத்தில் மரங்கள் நட்டு வைப்பு!

(அஸ்ஹர் ஆதம்)

சமுர்த்தி அபிவிருத்தி திணைக் களத்தால் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்துக்கு அமைவாக நாடு முழுவ தும் சர்வதேச வறுமை ஒழிப்பு வாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதனை முன்னிட்டு விசேட வேலைத் திட்டங்கள் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுக ளிலும் சமுர்த்தி பயனாளிகளின் மனைப் பொருளாதார அபிவிருத்தி மற்றும் பொது அலுவலகங்களில் மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் ஒரு அங்கமாக சாய்ந்தமருது லீடர் அஸ்ராப் வித்தியாலயத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன.



சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவி யாளர் யூ.எல்.ஜஃபரின் ஏற்பாட்டில் பாடசாலை அதிபர் எம்.ஐ சம்சுதீன் தலைமையில் நேற்று இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக சாய்ந்த மருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக்கும் விசேட அதிதிகளாக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீம், சமுர்த்தி முகாமைத்துவ பணிப் பாளர் றியாத் ஏ மஜீட், சமுர்த்தி திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா, பிரிவுக் கான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத் தர் ஏ.எம்.ஏ.ஹுதா உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்திக் குழுத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.





# திறன் அபிவிருத்திப் பயிற்சி

(நூருல் ஹுதா உமர்)

இளைஞர் விவகார விளையாட்டு அமைச்சும், தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து ஒழுங்கு செய்த கிழக்கு மாகாண உத்தியோத்தர்களுக்கான திறன் அபிவிருத்தி வளர்ப்பது சம்பந்தமான மூன்று நாள் வதிவிட பயிற்சிநெறி கிழக்கு மாகாணப் பணிப்பாளர் சரத் சந்திரபால தலைமமையில் மட்டக்களப்பு சத்துருகொண்டான் சர்வோதய கல்வி பயிற்சி நிலையத்தில் இன்று(12) ஆரம்பிக்கப் பட்டது.



இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிர்வாக பணிப்பாளர் மனுல சமல் பெரேராவும், விசேட அதிதிகளாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பயிற்சி பிரதிப் பணிப்பாளர் விறாஜ் கபில, நிர்வாகப் பிரிவு உதவிப் பணிப்பாளர் நிர்மலி, கிழக்கு மாகாண கணக்காளர் சஜித் குனசேகர, நிர்வாக உத்தியோகத்தர் பி.தியாகராஜா, மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் திருமதி கலாராணி ஜெயசுதாசன் மற்றும் உயர் தொழிநுட்ப கல்லூரி பணிப்பாளர் ஜெயபாலன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

# மன்னார் வலய சாதனையாளர் கௌரவிப்பு









(மன்னார் நிருபர்)

மன்னார் வலயக்கல்வி பணிமனை ஏற்பாடு செய்த 2022 ஆம் ஆண்டுக்கான சாதனையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று புதன்கிழமை (11) காலை மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் செல்வி ஜீ.டி.தேவராஜ் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் வங்கி முகாமையாளர்கள், மன்னார் வலயக் கல்வி முன்னாள் பணிப்பாளர்கள், உள்ளடங்களாக ஆசிரியர்கள், சாதனையாளர்களான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது 2022 ஆம் ஆண்டுக்கான சகல துறைகளிலும் சாதனை படைத்த மாணவர்கள் பதக்கம் அணிவித்து வெற்றிக் கேடயம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

# எமது கடல் வளத்தைப் பங்கு போட நாம் அனுமதிக்கப் போவதில்லை

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் ஆலம்

**(மன்னார் நிருபர்)**

வட பகுதி மீனவர்கள் இந்திய மீனவர்களால் எவ்வளவு காலம் துன்பப்படுகிறார்கள் என்று கடற்றொழில் அமைச்சருக்கு நன்கு தெரியும். நாம் ஒரு போதும் எமது கடல் வளத்தைப் பங்கு போட அனுமதிக்கப் போவது இல்லை. எனவே நீங்கள் முன்வைத்த கருத்தை அமைச்சரவை கூட்டத்தில் முன் வைக்க முடியுமா? என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம். ஆலம் கேள்வி எழுப்பியுள்ளார்.

மன்னாரில் நேற்று (11) புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு–

சில தினங்களுக்கு முன்னர் நாட்டின் பிரதமர் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கினார்.

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் நுழைந்து மீன் பிடிக்க அனுமதி வழங்குவதற்கு அரசு பரிசீலனை செய்து வருகிறது என்றும் கடலில் மீன்கள் உள்ள இடங்களுக்கு சென்று மீன் பிடிக்கும் உரிமை மீனவர்களுக்க உள்ளது எனறும் தெரிவித்துள்ளார். பிரதமரின் கருத்துக்கு பதில் கூற வேண்டிய பொறுப்பு எங்களுக்கு உள்ளது.

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகையும், அவர்களால் மேற்கொள்ளப்படும் தொழில் முறையும் அவர்களால் இங்கிருந்து சுரண்டிச் செல்லப்படும் கடல் வளங்களும் அதை விட கடல் சூழலை அழிக்கும் நடவடிக்கைகளை கண்டித்து நாங்கள் தொடர்ச்சியாகப் பல வருடங்களாக போராடி வருகிறோம்.

இவ்விடயங்கள் இலங்கை அரசுக்கு நன்றாக தெரியும். குறிப்பாக வட பகுதியில் இருக்கும் மீனவர்களை ஒரு கண்ணோட்டத்திலும், தென்பகுதியில் இருக்கும் தங்களுடைய மீனவ சமூகத்தை ஒரு கண்ணோட்டத்திலும் பார்த்து வருகின்றனர்.

வட பகுதி என்பது தமிழ் பேசும் மக்களை கொண்டதும், அது தமிழர்களின் பகுதி என்ற வகையில் இன்றைய அரசு அதனை வகுத்துள்ளது.

அந்த கருத்தை தெரிவித்த பிரதமர் அவர்கள் நீர்கொழும்பில் அல்லது சிலாபத்தில் இந்திய மீனவர்கள் தொழில் செய்வார்களாக இருந்தால் இந்த கருத்தை அவர் தெரிவிக்க முடியுமா?அதனை அந்த மக்கள் அனுமதிப்பார்களா?

வளங்களை விற்றுப் பணம் சம்பாதிக்கும் நோக்கத்தைத் தவிர அரசு தாங்கள் செய்கின்ற செயல்பாடு அங்குள்ள மக்கள் வாழ்வதற்கானது இல்லை.

வடபகுதி கடல் பரப்பு இங்கு வாழ்கின்ற தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தில் இது ஒன்றுதான் தங்கியுள்ளது. இன்று எந்தத் தொழில் முறையும் இல்லாமல் கடலை மட்டும் நம்பிக் கிட்டத்தட்ட 2 லட்சம் மீனவர்களும், அதனைச் சார்ந்த குடும்ப உறுப்பினர்களும் வட பகுதியில் வாழ்ந்து வருகிறார்கள்.

அவர்கள் முழுமையாக கடலை நம்பியே வாழ்ந்து வருகின்றனர். இந்த விடயம் புரியாத பிரதமர் இந்த கடல் வளத்தை எவ்வாறு பங்கிட்டுக் கொள்ளளாம்?அல்லது எவ்வாறு குத்தகைக்கு விடலாம்?. பிரதமரின் கருத்து எங்களை யோசிக்க வைக்கிறது. எது எவ்வாறு இருந்தாலும், நாங்கள் இன்று இருந்த நிலைப்பாட்டிலே இன்றும் இருக்கின்றோம்.

இந்திய மீனவர்கள் எமது கடல் பரப்பில் நுழைந்து மீன்பிடியில் ஈடுபட ஒருபோதும் அனுமதிக்க போவதில்லை.

ஜனாதிபதி, பிரதமர் அல்லது கடல்



தொழில் அமைச்சராக இருக்கட்டும். யாராக இருந்தாலும் எமது கடல் வளத்தை பங்கு போடவும், எமது நிலங்களை இன்னும் ஓர் நாட்டுக்கு விற்பதற்கு அனுமதிக்கப் போவதில்லை.

அண்மையில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இதே கருத்தை வலியுறுத்தி இருந்தார். பதவியில் இருந்து செல்கின்ற அரச உயர் மட்ட பிரதி நிதிகள் இலங்கையைக் காட்டிக் கொடுக்கிறார்கள். இங்குள்ள மீன் வளங்களை அள்ளிச் செல்லுங்கள் என வழி வகுக்கிறார்கள்.

இலங்கையில் உள்ள அல்லது வடபகுதி மீனவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் வகையில் அவர்கள் கதைப்பது இல்லை.

கடற்றொழில் அமைச்சர் கருத்து ஒன்றை வெளியிட்டுள்ளார். அதனை மீனவர்கள் சார்பாக வரவேற்கிறோம். அவரது கருத்து எவ்வளவு காலதுக்குத் தாக்கு பிடிக்கும் என்ற கேள்வி எழுகின்றது.

பிரதமர் ஒரு கருத்தைக் கூறுகிறார். அதற்கு எதிராகக் கடற்றொழில் அமைச்சர் ஒரு கருத்தைத் தெரிவிக்கிறார்.

கடற்றொழில் அமைச்சர் தனது கருத்தை அமைச்சரவை கூட்டத்தில் முன் வைப்பாரா? வட பகுதி மீனவர்கள் இந்திய மீனவர்களால் எவ்வளவு காலம் துன்பப்படுகிறார்கள் என்று கடற்றொழில் அமைச்சருக்கு நன்கு தெரியும்.–என்றார்.

# நினைவுச் சின்னம் வழங்கல்

**(எம். எப். நவாஸ்)**

கடந்த செப்டம்பர் மாதம் ஜீ. ரி. இசற். நிறுவனத்தால் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட குறுந்திரைப்பட நிகழ்வில் சிறந்த செயற்பாட்டுக்காக அட்டாளைச்சேனை பிரதேச செயலகததுக்கு ஜீ. ரி. இசற். நிறுவனத்தின் இணைப்பாளர் எம் மாஹிர் பிரதேச செயலாளர் எம் ஏ சி.அகமது ஷாபீருக்கு நினைவுச் சின்னம் வழங்கினார்.

இதன் போது கலாச்சார உத்தியோகத்தர் எம். எஸ்.ஜெளபர், அபிவிருத்தி உத்தியோகத்தர் சாஹிரா இஸ்மாயில் மற்றும் மகளிர் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். எச். எச். எம். பர்ஹானா ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# தற்காலத்தில் ஆங்கில கல்வி...




இன்றைய ஒவ்வொரு தனி மனித வெற்றிக்கும் இன்றியமையாத காரணியாகக் கல்வி காணப்படுகிறது. கல்வியால் தன்னை உயர்த்திக் கொள்ள ஒவ்வொரு தனி மனிதனும் ஓடிக்கொண்டிருக்கின்றான். அதன் அடிப்படையில் இன்றைய உலகில் ஆங்கிலக் கல்வியானது அவசியமாகக் காணப்படுகின்றது.

இவ்வுலகில் விஞ்ஞான வளர்ச்சியோடு நாம் சமமாக நடைபோட வேண்டுமானால் ஆங்கில அறிவுடன் கூடிய கணினி அறிவும் கட்டாயம் ஆகும். மொழி என்பது தொடர்பாடலுக்கு அவசியமான ஒன்றாகும். அதன் அடிப்படையில் ஒரு மனிதன் மொழி அறிவில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஒவ்வொரு கருத்துக்களின் பரிமாற்றமும் மொழியில் தங்கி உள்ளது. இவ்வாறு ஆங்கில மொழி ஒரு சர்வதேச பொது மொழியாகும்.

ஆங்கிலக் கல்வியின் அறிவின்றி இன்று பயணிப்பது சிரமமான விடயமாகும். உலகளாவிய தொழில் வாய்ப்புகள் ஆங்கில அறிவை மையப்படுத்தும் விதத்திலேயே காணப்படுகின்றன. உலகில் உள்ள பல்வேறு வணிக நிறுவனங்கள் ஆங்கில அறிவை முதன்மை திறனாகக் கொண்டே ஒரு நிறுவனத்திற்கான ஒரு ஊழியரை தெரிவு செய்கின்றன.

இன்றைய ஆங்கிலக் கல்வியானது கல்வி நிர்வாகச் சேவையில் பாரியளவு செல்வாக்கு செலுத்துகின்றது. விரும்பியோ விரும்பாமலோ ஆங்கிலக் கல்வியில் தேர்ச்சி பெற வேண்டும். எல்லா நாடுகளிலும் ஆங்கிலம் ஏதோ ஒரு வகையில் கற்பிக்கப்படும், கையாளப்பட்டு வருகின்றது. சில ஆங்கிலமானது தாய் மொழியாகவும் வேறு சில நாடுகளில் இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழியாகவும் பேசப்பட்டு வருகிறது.

உலக மயமாக்கல் நிகழும் இக்காலச் சூழ்நிலையில் பாமர மக்களும் ஆங்கில அறிவை எடுத்துச் செல்ல வேண்டிய தேவை காணப்படுகிறது. இலங்கை நாட்டில் வேலையில்லா பிரச்சினை என்று கூறப்படும் வாதத்துக்கு ஆங்கில மொழி கூட ஒரு மருந்தாகலாம்.

ஆங்கில மொழியில் தேர்ச்சி, அறிவாற்றல் அதிகரிக்குமானால் எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கையோடு கூடிய நிறுவனங்களில் வேலை செய்ய மக்கள் முன் வருவர். மேலும் வெளி நாடுகளுக்கு செல்வதன் மூலமும் தரமான சிறப்பான வேலைகளை இலகுவாக பெற முடியும். இந்த நிலையில் இலங்கையின் சிறந்த அன்னிய செலாவணியை கூட பெற வாய்ப்பு உள்ளது.

சிறுவயது கல்வி தொடக்கம் பாடசாலைக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி என அனைத்து மட்டங்களிலும் ஆங்கில மொழியில் சிறப்பு பெற்றிருக்க வேண்டும். தற்காலத்தில் வாழும் சாதாரண மனிதன் பொது அறிவு நிறைந்தவனாக இருக்க வேண்டும். அந்த வகையில் ஆங்கில பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் சிறந்த பொது அறிவைத் தருகின்றன.ஒவ்வொரு துறைகளிலும் ஆங்கிலத்தின் பங்கு காணப்படுகிறது. ஒவ்வொரு நாட்டிலும் தாய்மொழி பிரதான மொழியாக இருந்தாலும் அதனோடு இணைந்தவாறு ஆங்கில மொழியும் முதன்மை இடம் வகிக்கின்றது.

இனிவரும் காலங்களில் ஆங்கில மொழி அறிவின்றி எமது வாழ்க்கையை நகர்த்திச் செல்வது கடினமாகக் காணப்படும். ஒவ்வொரு பெற்றோர்களும் பிள்ளைகளிடம் ஆங்கில மொழியை ஊட்டுவதில் அக்கறையோடு செயற்பட வேண்டும். சில பெற்றோர்களின் கவனயீனத்தாலும் அக்கறை இன்மையாலும் மாணவர்கள் பலர் மொழியில் விருப்பமின்றி வெறுப்புற்று காணப்படுவதை நமது கண்முன்னே காணக் கூடியதாக உள்ளது.

இவ்வாறான தவறுகள் இனிவரும் காலங்களில் இடம் பெறாமல் தடுக்க வேண்டும். திணிக்காது தரம் ஒன்றிலிருந்து மேம்படுத்திக் கொண்டு வருதல் வேண்டும். இதுவரை காலமும் ஆங்கில அறிவில் ஏற்பட்ட அலட்சியம் இனிவரும் காலங்களில் ஏற்படாமல் இருக்க வேண்டும்.

ஆங்கில மொழியில் ஒருவன் சிறப்பு தேர்ச்சி பெற்றிருப்பானாயின் அவனுடைய தொடர்பாடல் திறன் அதிகரிப்பது மட்டுமல்லாமல் தலைமைத்துவ பண்புகள்,ஆளுமை பண்புகள் இயல்பாகவே வளர்ச்சியடையும். அவற்றை விட ஒரு கடையிலோ அல்லது பொது இடங்களிலோ என எங்கு சென்றாலும் தற்காலத்தில் அதிகம் ஆங்கில வார்த்தைப் பிரயோகங்களே பயன்பாட்டில் உள்ளன. ஆகவே ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருப்பானாயின் அவன் எந்த ஒரு சவாலையும் எதிர் கொள்ள கூடிய வகையில் பலமிக்க ஒருவனாக தற்காலத்தில் திகழ முடியும்.

ஆங்கில மொழியின் அவசியத்தை குறிப்பாக கிராமப்புற மக்களும் அறிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் அவர்களுடைய பிள்ளைகளின் எதிர் கால கல்வி வாழ்க்கை பட்டப்படிப்பு

வாழ்க்கையில் ஆங்கிலக் கல்வியானது அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. இலங்கையில் ஆங்கிலக் கல்வி அறிவு கிராமப்புறங்களில் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. நகர்ப்புறங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது கிராமப்புற மக்களின் ஆங்கிலக் கல்வியில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும்.

ஆங்கிலக் கல்வியில் பின்தங்கிய தன்மையில் உள்ள மாணவர்கள் அதிலிருந்து மீண்டும் ஆங்கிலக் கல்வி அறிவைப் பெற்று அவர்களுக்கு உரிய வாய்ப்புகளைத் தேடி ஆங்கிலக் கல்வி மூலம் அவர்களின் வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

அண்மை காலங்களில் அரச பாடசாலைகளில் வாரத்துக்கு ஒரு நாள் அனைத்துத் தொடர்பாடல் நடவடிக்கைகளும் ஆங்கிலத்தில் இடம்பெற வேண்டும் என்ற திட்டம் இலங்கை அரசால் கொண்டுவரப்பட்டது. அத்திட்டத்தை திறம்படச் செய்ய ஆசிரியர்களுக்கான பயிற்சிகளும் கொடுக்கப்பட்டன.

உண்மையில் இலங்கை அரசால் இந்த நடவடிக்கை வரவேற்புக்கு உட்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். இதன் ஊடாக ஆங்கில மொழி விருத்தியில் இலங்கை அரசால் கரிசனை காட்டப்படுவது உண்மையாகும். அரசால் பல்வேறு திட்டங்கள் இருந்தாலும் மாணவர்கள் மத்தியில் ஆங்கில அறிவு மட்டும் கீழ்நிலையில் உள்ளது.

எனவே இந்நிலை மாற வேண்டும். மாணவர்கள் மட்டுமின்றி மற்றவர்களும் இவ்வுலகில் ஆங்கில அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். தற்காலத்தில் ஆங்கிலக் கல்வியின் தேவையை ஒவ்வொருவரும் உணர்ந்து அதற்கேற்ற செயற்படுவார்களேயாயின் ஏதோ ஒரு விதத்தில் வெற்றியைப் பெற முடியும்.

**சி.கதீசனா,**
2 ஆம் வருடம்,
ஊடக கற்கை,
யாழ். பல்கலைக்கழகம்.

# இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர் 17 பேர் தாயகம் திரும்பினர்



இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர் 17 பேர் தாயகம் திரும்பியுள்ளனர்.

கடந்த செப்டெம்பர் 12 ஆம் திகதி இராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத் தில் இருந்து விசைப்படகில் சென்ற மீனவர்கள் நெடுந்தீவு அருகே மீன்பிடித் துக் கொண்டிருந்தனர்.

அவர்கள் எல்லை தாண்டி வந்ததாகக் கூறி, இலங்கை கடற்படையினர் 8 பேரைக் கைது செய்தனர். அத்துடன், விசைப்படகையும் பறிமுதல் செய்தனர்.

மேலும், அதே பகுதியில் மீன்பிடித் துக் கொண்டிருந்த புதுக்கோட்டை மாவட் டம் ஜெகதாப்பட்டினத்திலிருந்து வந்த 5மீனவர்கள்,கோட்டைப்பட்டினத்திலிருந்து வந்த 4 மீனவர்கள் என மொத்தம்17 பேரை கைது செய்து, யாழ்ப்பாணம் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

யாழ்ப்பாணம் ஊர்காவல் துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட 17 மீனவர்களையும் விடுதலை செய்து நீதிபதி உத்தரவிட்டார்.

சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட 17 மீனவர்கள் நேற்று விமானம் மூலம் கொழும்புவிலிருந்து புறப்பட்டு, சென்னை விமான நிலையம் சென்றடைந்துள்ளனர். அவர்களை மீன்வளத் துறையினர் தனி வாகனங்கள் மூலம் சொந்த ஊருக்கு அனுப்பிவைத்தனர். இதேவேளை, இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் முனைக்காடு கடற்கரை பகுதியில் நேற்று முன்தினம் காலை இலங்கையைச் சேர்ந்த பைபர் படகு நிறுத்தப்பட்டிருந்தது என தகவல் கிடைத்துள்ளது. அந்தப் படகை கைப் பற்றி மண்டபம் மெரைன் பொலிஸார் விசாரணை நடத்தி வந்தனர்.

படகில் வந்த இருவர் மண்டபம் பகுதியில் பதுங்கியிருப்பது தெரியவந்தது. இதையடுத்து, சட்டவிரோதமாக படகில் வந்த மன்னார் ஜெகன் மற்றும் நாகேந் திரன் ஆகியோரையும், அவர்களுக்கு உதவியதாக மண்டபம் முகாமில் வசிக்கும் ராபின்சன் என்பவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# இஸ்ரேலில் உள்ள இந்தியர்களை அழைத்து வர மத்திய அரசு திட்டம்



இஸ்ரேலில் உள்ள இந்தியர்களை பாதுகாப்பாக இந்தியா அழைத்து வரு வதற்கு மத்திய அரசு 'ஒபரேஷன் அஜய்' திட்டத்தை தொடங்கி உள்ளது.

இது தொடர்பாக மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தனது சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், இஸ்ரேலில் இருந்து திரும்ப விரும்பும் நமது குடிமக்கள் திரும்பு வதற்கு வசதியாக 'ஒபரேஷன் அஜய்' யைத் தொடங்குகிறோம்.

சிறப்பு விமானங்கள் மற்றும் பிற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. வெளி நாட்டில் உள்ள நமது குடிமக்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை முழு மையாக உறுதிப்படுத்துவதற்கான முயற்சி இது என்று குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள சமூக வலைத்தள பதிவில், இந்தியா வுக்கு திரும்ப விருப்பம் தெரிவித்து பதிவு செய்துள்ளவர்களுக்கு இமெயில் மூலம் பதில் அனுப்பப்பட்டுள்ளது.

அவர்களுக்கான சிறப்பு விமானம் இன்று இந்தியாவுக்கு புறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முதல் சிறப்பு விமானத்தில் செல்ல இடம் கிடைக்காதவர்கள் அடுத்தடுத்து இயக்கப்படும் விமானங்களில் அனுப்பிவைக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவா திகள் நடத்திய தாக்குதலை அடுத்து அவர்களுக்கு எதிராக இஸ்ரேல் இராணு வம் தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறது. இதன் காரணமாக டில்லியில் இருந்து டெல் அவிவ் நகருக்கு இயக்கப்பட்டு வந்த விமான சேவையை இந்தியா தற்காலிகமாக ரத்து செய்தது.

இதனால், அங்குள்ள இந்தியர்கள் நாடு திரும்ப முடியாத நிலை ஏற்பட்டது. இதனை கருத்தில் கொண்டு தற்போது மத்திய அரசு 'ஒபரேஷன் அஜய்' திட்டத்தை தொடங்கி உள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் அங்குள்ள இந்தியர்கள் இன்று முதல் இந்தியாவுக்கு அழைத்து வரப்பட உள்ளனர்.

# இஸ்ரேல் பணயக் கைதிகளை சித்திரவதை செய்யும் ஹமாஸ்!

## சமூக வலைதளத்தில் பரவும் காணொலியால் பரபரப்பு



ஹமாஸ் தீவிரவாதிகள் இஸ்ரேல் பிணைக் கைதிகளை சித்திரவதை செய்யும் காணொலி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

இஸ்ரேல் இராணுவம் மற்றும் ஹமாஸ் தீவிரவாதிகள் இடையிலான போர் நேற்று 5 ஆவது நாளை எட்டியது. முதல் நாளில் இஸ்ரேலைச் சேர்ந்த குழந்தைகள் உள்ளிட்ட சுமார் 150 பேரை ஹமாஸ் தீவிரவாதிகள் சிறை பிடித்துச் சென்றனர். சிலரை அவர்களுடைய வீட்டிலேயே சிறை வைத்துள்ளனர்.

இதனிடையே, காசா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் வீசும் ஒவ்வொரு குண்டுக்கும் ஒரு பணயக் கைதியை கொல்வோம் என அவர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையில், பணயக் கைதியாக உள்ள ஒரு குடும்பத்தினரை ஹமாஸ் தீவிரவாதிகள் சித்ரவதை செய்யும் காணொலி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

அந்த காணொலியில், துப்பாக்கிய ஏந்திய ஒருவர், நாங்கள் இங்குதான் இருக்கிறோம் என உங்கள் நாட்டு மக்களிடம் தெரிவியுங்கள் என காலில் ரத்தம் சொட்ட அமர்ந்திருந்து ஒருவரிடம் கூறுகிறார்.

அந்த பணயக் கைதியுடன் அவரது மனைவி உட்கார்ந்திருக்கிறார். அவரது மடியில் ஒரு பெண் குழந்தை உள்ளது. மேலும் 2 குழந்தைகள் அவர்களுக்கு அருகே தரையில் உட்கார்ந்திருக்கின்றனர்.

அந்த பிணைக் கைதி, காசா பகுதியை ஒட்டிய கிபுட்ஸ் நகரில் உள்ள எங்கள் வீட்டில் ஹமாஸ் அமைப்பினர் உள்ளனர். என் காலில் அவர்கள் துப்பாக்கியால் சுட்டதில் ரத்தம் வடிகிறது என கூறுகின்றனர்.

இதையடுத்து, கைதியிடம் அடையாள அட்டை கேட்கின்றனர். தேடி எடுக்க வேண்டும் என அவர் கூறியதையடுத்து, ஹமாஸ் அமைப்பைச் சேர்ந்த மற்றொருவர் அடையாள அட்டையைத் தேட உதவுகிறார். இந்த காணொலி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

ஆனால், ஹமாஸ் தீவிரவாதிகளின் மிரட்டலை இஸ்ரேல் இராணுவம் கண்டுகொள்ளவில்லை. ஹமாஸ் தீவிரவாதிகள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

# ஒவ்வொரு ஹமாஸும் உயிரற்றவர்கள்: இஸ்ரேல் பிரதமர்



ஹமாஸ் பயங்கரவாதிகளுடனான யுத்தம் தொடரும் எனவும் பாலஸ்தீன பயங்கரவாதிகள் அனைவரும் உயிரற்ற மனிதர்கள் என்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் குழு சனிக்கிழமை இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு முதல் முறையாக ஹமாஸ்களை அழிக்கும் இஸ்ரேலின் நோக்கத்தினை அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

ஹமாஸ்கள் டேஷ் எனப்படும் இஸ்லாமிய அரசு குழு உலகம் டேஷ்களை அழித்ததைப் போல நாங்கள் அவர்களை நசுக்கி அழித்தொழிப்போம் என அறிக்கையொன்றில் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் யாவ் காலன்ட் கூறுகையில், நாங்கள் ஹமாஸ்களை பூமியில் இருந்தே அழித்தொழிப்போம் என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே இஸ்ரேலில் தற்போது நிலவி வரும் நெருக்கடியான காலத்தில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது அரசியல் வேறுபாடுகளை தற்காலிகமாக கைவிட்டுவிட்டு எதிர்க்கட்சி தலைவர் பென்னி கன்ட்ஸ் மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சர் யாவ் காலன்ட் ஆகியோருடன் இணைந்து அவசர நிலை அரசை உருவாக்க சம்மதித்துள்ளனர்.

இவர்கள் போர்க்கால அமைச்சரவையாக செயல்படுவர் என்பது குறிப்பிடத்தக்கது.